**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 22.04.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்**
**"43-வது பட்டமளிப்பு விழா-2022**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் **"43-வது வருடாந்திரப் பட்டமளிப்பு விழாவிற்கு"** இப்பல்கலைக்கழகத்தால் **31.03.2022** அன்று வரையிலான தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட மாணவ மாணவியர்களிடமிருந்து பட்டங்கள் பெறுவதற்கான விண்ணப்பங்களை வரவேற்கிறது. விண்ணப்பப்படிவம் மற்றும் இதர விவரங்களைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணையதளமான www.tnau.ac.in மூலம் **25.04.2022** முதல் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை www.tnau.ac.in இணையதளத்தில் உள்ள இணைப்பு (link) மூலம் ஆன்லைனிலும் சமர்ப்பிக்கலாம். விண்ணப்பக்கட்டணத்தை **SBI collect (The Comptroller, TNAU, Coimbatore)** மூலம் கணக்கில் செலுத்த வேண்டும்.

இப்பட்டமளிப்பு விழாவிற்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய இணைப்புகளுடன் (அதாவது தற்காலிக பட்டப்படிப்பு சான்றிதழின் (PC) நகல், இறுதி பருவ மதிப்பெண் சான்றிதழின் நகல் (ஒன்று மட்டும்), இணையதளம் மூலமாக வங்கியில் செலுத்தப்பட்ட கட்டணத்திற்கான இரசீது மற்றும் சமீபத்தில் எடுத்த புகைப்படம் (2nos.) இப்பல்கலைக்கழகத்திற்கு **18.06.2022-ம் தேதி மாலை 5 மணிக்குள் வந்துசேர வேண்டும்.** மேலும் இதுசம்பந்தமான விவரங்கள் அறிய விரும்புவோர் **0422-6611506** என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

மக்கள் தொடர்பு அலுவலர்